செய்தி வெளியீடு எண் : 31 நாள்: 27.03.2020

## செய்திக் குறிப்பு

தேனி மாவட்டத்தில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் மாவட்ட காவல் துறையின் சார்பில் தேனி காவலன் என்ற செயலி முன்னேர செயல்பட்டு வருகிறது. இச்செயலியின் மூலம் தற்போது, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசு வெளியிடும் முக்கிய அறிவிப்புகள், நோய் பராவாமல் தடுப்பது குறித்த விழிப்புணர்வு செய்திகள், உண்மைக்கு மாறான செய்திகள் இருப்பின் பொதுமக்களுக்கு விளக்கம் அளித்தல் போன்றவைகள் தொடர்பாக தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், காவல், மருத்துவம், வருவாய், உள்ளாட்சித்துறை ஆகிய துறைகளின் முக்கிய அலுவலர்களின் கைபேசி எண்களும் இச்செயலியில் இடம் பெற்றுள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் பேரிடர் கட்டுப்பாட்டு அறையில் உள்ள அலுவலர்களுடன் இச்செயலியின் மூலம் தனிமைப் படுத்தப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளும் வசதி உள்ளது. இச்செயலியின் மூலம் பொதுமக்கள் 24 மணி நேரமும் புகார் அளித்திடலாம்.

தேனி மாவட்டத்திற்குள் அத்தியாவசிய பொருட்களை சரக்கு வாகனங்கள் மூலம் கொண்டு செல்வதற்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களை தொடர்பு கொண்டு அனுமதி அட்டை பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்டத்தில் இன்று (27.03.2020) வரை காவல்துறையினரால் 203 நபர்கள் மீது 144 தடை உத்தரவை மீறியதன் காரணமாக 191 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேவையில்லாத காரணங்களால் வெளியில் சுற்றிய 153 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், அம்மா உணவகங்கள், சமுதாய உணவு கூடங்களில் போதுமான உணவு பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு, ஆதரவற்றோர்கள் மற்றும் களப்பணியில் ஈடுபட்டு வருகின்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தினசரி 3 வேளை உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த உணவகங்கள் மூலம் மாவட்டத்தில் நேற்று (26.03.2020) வரை 10,644 நபர்களும், இன்று (27.03.2020) 9,864 நபர்களும் என மொத்தம் 20,508 நபர்கள் உணவு அருந்தி உள்ளனர் என **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**